**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.366/2024 நாள்- 07.08.2026

**வா.சா.3. பாண்டி**

**குறுக்கு விசாரணை 1ம் பிரதிவாதி தரப்பில்**

கடந்த 4 வருடங்களாக இராஜபாளையம் நகராட்சியில் பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சொத்திற்கான வரிவிதிப்பு நான் இராஜபாளையத்திற்கு பணிமாறுதல் செய்வதற்கு முன்பாகவே மாற்றப்பட்டுவிட்டது என்றால் சரிதான். பிரதிவாதி கோவில் சார்பாக தாவா சொத்தின் அடிமனை 1ம் பிரதிவாதி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதனால் அடிமனை வரிவிதிப்பை 1ம் பிரதிவாதி கோயில் பெயருக்கு விதிக்க வேண்டும் என்று மனுவும் ஆவணமும் கொடுத்தார்கள் என்று கேட்டால் நான் பணியில் சேர்ந்த பின்பு கொடுக்கவில்லை முன்பு கொடுத்திருக்கலாம். இந்த வழக்கு சொத்தில் அடிமனை வரிவிதிப்பு 1ம் பிரதிவாதி கோயில் பெயரில் இருக்கிறது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் அடிமனை வரிவிதிப்பு 1ம் பிரதிவாதி கோயில் பெயரில் எனக்கு தெரிந்து 2002 ம் ஆண்டிலிருந்து சா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம்இருந்து வருகிறது அதற்கு முன்பு உள்ளதா என்று ஆவணத்தை பார்த்து தான் கூறமுடியும். பொதுவாக ஒரு சொத்தின் அடிமனை ஒரு நபருக்கும், மேற்கோப்பு மற்றொரு நபருக்கும் பாத்தியப்பட்டு இருந்தால் அடிமனைக்கும் ஒரு வரிவிதிப்பும், மேற்கோப்பிற்கு ஒரு வரிவிதிப்பும் விதிக்கப்படுகிறது என்றால் சரிதான். அடிமனை வரிவிதிப்பு 1ம் பிரதிவாதி கோயில் பெயருக்கு விதிக்கப்பட்டு வருவதற்கு வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவித்தது இல்லை.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.